<u>பொருள்கள்</u>

நாகர்கோவில் நகராட்சி பகுதிகளில் குடிநீர் வினியோகத்திற்காக நகராட்சி சொந்தமான முக்கடல் அணையிலிருந்து நாள் ஒன்றிற்கு 21 mld தண்ணீரும், வழியோர கிராமங்கள் மற்றும் கன்னியாகுமரி, சுசீந்திரம் ஆகிய பகுதிகளுக்கும் சேர்த்து மொத்தம் 25 Mld தண்ணீர் முக்கடல் அணையிலிருந்து தினசரி எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய கூடுதல் நீராதாரமாக உலக்கையருவியாறு திட்டம் செயல்படுத்த 2006–2007–ம்ஆண்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் மானிய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.83–ல் “3 கோடியே 30 லட்சம் மதிப்பீட்டில் நாகர்கோவில் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம்” செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறை ஆணை எண்.6775/2005 கு.வ.2 நாள் 06.12.2006 –ல் அறிவுறுத்தியபடி இவ்வலுவலக ந.க.எண்.8231/2003/இ2 நாள் 20.12.2006 – ன் படி ஆய்வு கட்டணமாக ரூ.25 லட்சம் பொதுப்பணித்துறைக்கு செலுத்தப்பட்டது. தற்போது விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க ஆய்வு கட்டண மீதித்தொகையான ரூ.1.64 கோடியை செலுத்தக்கோரி பொதுபணித்துறையிலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் அவர்களின் கடித எண்.பி/27674/95 நாள் 02.12.2008 – ன் படி இத்திட்டத்தை செயலாக்க திட்ட மதிப்பீடு ரூ.63.00 கோடி வரைபடம் மற்றும் திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.,1.89 கோடி திட்டச் செய்லாக்கம் செய்ய 7.88 கோடி ஆக மொத்தம் 72.77 கோடி செலவாகும் என தெரிவிக்கப்பட்டது. மேலும் உலக்கையருவி முதல் குடிநீர் சுத்திகரிப்ப நிலையம் வரை குடிநீர் குழாய் அமைக்கம் பணிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஆய்வு மேற்கொண்டு ரூ.8.70 கோடி ஆகும் என தெரிவித்துள்ளது. மேற்படி தொகைகளை மானியமாக வழுகக்கோரி இந்நகர்மன்ற தீர்மானம் எண்.773 நாள் 23.12.2008 – ன் அடிப்படையில் அரசுக்க கருத்துரு இவ்வலுவலக ந.க.எண்.8231/03/இ2 நாள் 19.01.2009 – ன் படி அனுப்பப்பட்டது அதன்படி ஆய்வு மேற்கொண்டதில் 58.50 mld தேவை எனவும் முக்கடல் அணையில் எடுக்கப்படும் 21 mld போக மீதம் உள்ள 37. 5 mld–யில் 12 mld மட்டுமே உலக்கையருவியாற்றிலிருந்து எடுக்க இயலும் அணை 51 கன அடி கொள்ளளவு கொண்டதாக இருக்கும் அதை கட்டி முடிப்பதற்கு மூன்று ஆண்டுகள் ஆகும் திட்டம் செயல்படுத்த 81 .465 கோடி ஆகும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குனர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனரக பொறியாளர் கூட்டு ஆய்வு அறிக்கையில் தெரிவித்ததன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.139 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை ( கு.வ.2) துறை நாள் 10.08.2009 –ன் படி 2006–2007–ம் ஆண்டு மானிய கோரிக்கை அறிவிப்பு எண்.83 கைவிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக மழை அளவு குறைவாக இருந்ததால் மார்ச், ஏப்ரல் , மே மாதங்களில் தண்ணீர் தட்டுபாடு ஏற்பட்டதால் அரசின் சிறப்பு அனுமதி பெற்று பெருஞ்சாணி அணையிலிருந்து குடிநீருக்காக தண்ணீர் திறக்கப்பட்டு ஆறு நாட்களுக்கு ஒரு நாள் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. தற்போது உள்ள மக்கள் தொகையான **2,60,000** வந்து செல்வோர் **50,000** மற்றும் கன்னியாகுமரி சுசீந்திரம் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு முக்கடல் அணையில் போதுமான தண்ணீர் தேக்கி வைக்க இயலாத நிலை இருப்பதால் கூடுதல் நீராதாரமாக குழித்துறை ஆற்றில் இருந்து தண்ணீர் எடுப்பதற்காக நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் நகர்மன்ற தீர்மான எண்.**53** நாள் **29.06.2009**–ல் அதற்கு அனுமதி வழங்கியும் பேச்சிப்பாறை அணையிலிருந்து அனந்தனார் சானல்மூலம் முக்கூடல் அணைக்கு குடிநீருக்காக கொண்டு வரும் தண்ணீர் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் குழாய் மூலம் பாதுகாப்பான குடிநீராக கொண்டுவர ஆய்வுபணி மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தெரிவிக்க தீர்மானிக்கப்பட்டது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.**83** நாள் **31.05.2010**–ன் படி குடிநீர் வடிகால வாரியம் மூலமாக கூடுதலாக **25.50** Mld தண்ணீர் பெறுவதற்கு தீர்மானம் இயற்றப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக ஆய்வு பணி மேற்கொள்ள நகரராட்சி நிர்வாக இயக்குநருக்கு ஒப்புதல் வழங்க கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.**55876**/2010/குவ–1 நாள் **27.01.2011**–ல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு நகராட்சிகளில் ஏற்கனவே இருக்கும் குடிநீர் திட்டங்கள் மற்றும் கூடுதல் நீராதாரம் தோற்றுவிப்பதற்கும் நகரின் எல்லைவரை செயல்படுத்தவும், ( Package – 1 ) ஆய்வு பணிகள் மேற்கொள்ள (TWAD ) தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு அனுமதி வழங்கவும், நகரின் உள்புறத்தில் நீர்த்தேக்க தொட்டிகள், குடிநீர் வினியோக குழாய்கள் அமைத்தல், வீட்டிணைப்பு வழங்குதல் போன்ற பணிகளை ( Package – 1I ) பணிகளை ஆய்வு செய்ய உள்ளாட்சி அமைப்புகள், தனியார் நிறுவனங்களை கலந்ததற்குரியவர்களாக (Consultant) நியமனம் செய்யவோ அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வு செயலாக்கம் செய்ய உரிய மன்ற அனுமதி பெற்று வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் ஆய்வு செய்து முடிவு செய்யலாம்

கோப்பு எண்.**8231/2003**/இ2

**தீர்மான எண் : 41 – முதல்திட்டம் (Package I) தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் மூலம் செயல்படுத்தவும் இரண்டாம் திட்டம் (Package II) தனியார் நிறுவனஙகளைக்கொண்டு செயல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது**